# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

ராஜா அண்ணாமலைபுரம், மதராஸ்-28.

" முயற்சி திருவினை யாக்கும்

தொகுதி 25 } சார்வரி ௵ தை ௴ 1961 ஜனவரி ௴ பகுதி 10

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பத்திராதிபர் குறிப்புகள் ... | 171 |
| ஆங்கில போதனை ... | 173 |
| தென் இந்திய ஆசிரியர் சங்க விசேஷ மகாநாடு—தஞ்சை ... | 175 |
| மாணவர்களே அமைத்த பல்கலைக் கழகம் ... | 178 |
| குறும்புக்காரன் ... | 180 |
| திருந்திய மாணவன் ... | 181 |
| செய்தித் திரட்டு .. | 182 |
| பட்டம் விடுவோம் ... | 184 |


உள் நாடு : வருஷ சந்தா ரூ. 2.00 தனிப் பிரதி 25 ந.பை.

# பாலர் கல்வி

| தொகுதி 25 | சார்வரி ஹு தை மீ<br>1961 ஜனவரி மீ | பகுதி 10 |
|---|---|---|

## பத்திராதிபர் குறிப்புகள்

### பொங்கல் வாழ்த்து

நமது வாசகர்களுக்கு எமது மனமார்ந்த பொங்கல் நல் வாழ்த்துக்களை அளிக்கிறோம். ஆசிரியர் உலகம் தழைத்து ஓங்கி தேவைப் பூர்த்தியால் முகமலர்ந்து மனோ அமைதியுடன் பலனை அளிக்கும் பாட திட்டத்தைக் கையாண்டு வருங்கால மக்களை உருவாக்க புது யுகம் இப் பொங்கலிலிருந்து பிறக்கும் என்ற நம்பிக்கையை ஆசிரியர் கொண்டுள்ளார்கள். சூரியன் இல்லாமல் உலகம் எப்படி வாழ முடியாதோ, அதேபோல் ஆசிரியர் இல்லாமல் வருங்கால சமூகம் நல் வாழ்வு வாழ முடியாதென்ற உண்மையை இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்டுவது மிகையாகாது. எப்பேர்ப்பட்ட கிருமிகளையும் போக்கி பூமியையும், ஆகாயத்தையும், தண்ணீரையும் கதிரவன் எப்படிச் சுத்தப்படுத்துகிறானோ, அதே மாதிரி குழந்தைகளின் உள்ளத்தை நவநாகரிகம் என்கிற பெயரால் கெடுத்துவரும் கிருமிகளைப் போக்கி சுத்தஞ் செய்ய ஆசிரியர் பாடுபடுகிறார். கதிரவனைப் போற்றும் பொங்கல் விழாவில் ஆசிரியரின் முக்கியத்துவத்தைப் பொதுஜனம் அறிந்து கொள்ளுவது பொருத்தமாகும்.

### பாராட்டுகிறோம்

சென்ற மாதம் தேசீயப் பரிசு பெற்ற நம் தமிழ் நாட்டைச் சார்ந்த நான்கு ஆசிரியர்கட்கும் பாராட்டுதலைத் தெரிவிக்கிறோம். அவர்களில் மூவர் ஆரம்ப ஆசிரியர்கள். ஆரம்ப ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டி, தேசீயப் பரிசு அளிக்கும் திட்டத்தை வரவேற்பதோடு சர்க்காருக்கு எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

### விசேஷ மகாநாடு

தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் விசேஷ மகாநாடு 30-12-1960-ல் தஞ்சையில் நடைபெற்றது. மாநாட்டின் நிகழ்ச்சிகள் இப்பத்திரிகையில் வேறு பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. மாநாட்டிற்கு பலவகையிலும் உதவிபுரிந்த தஞ்சை மாவட்ட ஆசிரியர் கழகத்திற்கு எமது நன்றி.

### செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்

ஹையர் கிரேடு ஸ்தானங்களில் வேலை செய்துவரும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களின் புள்ளி விவரங்களை யூனியன் சேகரிக்க முற்பட்டிருப்பதால், இப்பத்திரிக்கையில் வெளியிட்டிருக்கும் அறிக்கையின்படி விவரங்கள் அனுப்புமாறு அப்படிப்பட்ட ஆசிரியர்கள் வேண்டப்படுகிறார்கள்.

### புதுச் சம்பளத் திட்டம்

பென்ஷனுக்கு எடுத்துக் கொள்ளப்படுவதுபோல், ஆசிரியரின் மொத்த சர்வீசைக் கணக்கிட்டு (weightage) மூன்று வருட சர்வீசுக்கு ஒரு சம்பள உயர்வு கொடுத்தாலொழிய சர்வீசான ஆசிரியர்கட்குப் புதுச் சம்பளத் திட்டத்தின் முழுப் பயன் கிடைக்காது. ஆசிரியர் எந்த வகுப்பில், எந்தப் பள்ளியில் வேலை செய்திருந்தாலும், எந்த கிரேடில் வேலை செய்திருந்தாலும், எந்த ஸ்கேலில் வேலை செய்திருந்தாலும், அது தேச சேவையாதலால், மொத்த சர்வீசு கணக்கிட வேண்டிய நியாயமுண்டு. ஆசிரியர் வேலையில் எவ்வளவு திறமையுடன் வேலை செய்தாலும், சர்க்கார் ஊழியருக்கு உள்ள பிரமோஷன் சந்தர்ப்பம் இல்லாததால், மொத்த சர்வீசுபடிச் சம்பள

உயர்வு கொடுபட வேண்டிய நியாயமுமுண்டு. சர்க்கார் இவ்விஷயமாக உத்திரவு சீக்கிரத்திலேயே பிறப்பிப்பார்களென எதிர்பார்க்கிறோம்.

**வீட்டு வாடகைப் படி**

நகரிலும், பட்டணங்களிலும் வசிக்க வேண்டிய ஆரம்ப ஆசிரியர் குடியிருக்கும் வீட்டை வீடு என்ற பெயர் பொருந்த இருக்கிறதா என்பதைப் பார்த்தாலே போதும். எல்லா ஆசிரியர்களும் சலுகையில் வித்தியாசமின்றி நடத்தப்பட வேண்டிய இக்காலத்தில் ஆசிரியர்களில் ஒரு பெருஞ்சாரார் இந்த சலுகையில்லாமலிருப்பது நியாயமில்லை. அடுத்த பட்ஜெட் திட்டத்திலாவது, எல்லா ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகைப் படி கிடைக்கும்படியாகச் செய்யும்படி சர்க்காரை வேண்டுகிறோம்.

**வைத்திய வசதி**

குழந்தைகளுக்குப் பள்ளிகள் மூலமாக வைத்திய வசதி செய்து தரவேண்டுமென்று கேட்கப்படும் இக்காலத்தில் எய்டெட் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டும் இலவச வைத்திய வசதி அளியாதிருப்பது சரியல்ல. சர்க்கார் ஆவன செய்யுமாறு வேண்டிக் கொள்ளுகிறோம்.

**பென்ஷன் கிராக்கிப் படி**

ஆசிரியர்களில் பெரும்பாலோர் பத்து ரூபாய்க்கும் குறைந்து பென்ஷன் வாங்க வேண்டிய நிலையிலிருப்பதால், கிராக்கிப் படி பத்து ரூபாய் அவர்களுக்கு அளிப்பது மிக உதவிகரமாயிருக்கும். இதற்குச் செலவு சுமார் ஐந்து லக்ஷ ரூபாயே யாகும். தஞ்சை மகாநாட்டில் இது விஷயமாக எடுத்துக் காட்டப்பட்டது. சர்க்கார் இந்த கிராக்கிப்படியைக் கொடுக்க முன்வருவார்களென நம்புகிறோம்.

**ஒரு சிலரே**

1-4-1955-க்கு முன்பு ஆசிரியர் வேலையிலிருந்து ரிடையராகி உயிருடனிருப்பவர் வெகு சிலரே இருக்க முடியும். அவர்களிடமிருந்து யூனியனுக்கு விண்ணப்பங்கள் வந்து கொண்டிருப்பதாலும், சர்க்காரே உயிருடன் வாழ்ந்து வரும் ரிடையரான எல்லா ஆசிரியர்கட்கும் பென்ஷனளிக்கத் திட்டமொன்றைப் பரிசீலித்து வருவதாலும், 1-4-1955-க்கு முன் ரிடையரான ஆசிரியர்கட்கு நிவாரணம் கிடைக்குமென நம்புகிறோம்.

**அகில இந்தியக் கல்வி மகாநாடு**

ஆசிரியரின் குறைந்தபட்ச சம்பளம் ரூபாய் நூறு இருக்க வேண்டுமென அகில இந்தியக் கல்வி மகாநாட்டில் தீர்மானித்ததை ஆமோதிக்கிறோம். இதே தீர்மானத்தை வெகு நாட்களாக நம் ராஜ்ய சர்க்காரிடம் வலியுறுத்தி வருகிறோம். சம்பளத் திட்டக் கமிஷன் White-collared job நூறு ரூபாய்க்குக் குறையாமல் பெற வேண்டுமென்று சிபார்சு செய்தும், லோயர், ஹையர் கிரேடு ஆசிரியர்கள் இச்சம்பளத்திற்குத் தகுதியுள்ளவர்களாகக் கருதப்படாதது வருந்தத்தக்கதே. அகில இந்திய ரீதியில் வற்புறுத்தப்பட்ட இந்த தீர்மானத்திற்கிணங்க, அகில இந்திய மாநாட்டில் தலைமை தாங்கிய, நமது மதிப்பிற்குரிய கனம் கல்வி அமைச்சர் அவர்கள் நமது ராஜ்யத்தை எடுத்துக் காட்டாக இச்சம்பள உயர்வு விஷயத்தில் செய்வாரென ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

**51-வது மாநிலக் கல்வி மகாநாடு**

1964 மே மாதம் (திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கத்தின் அழைப்பிற்கிணங்க) திருச்சியில் நடைபெறும்.

---

## புதுச் சம்பளத் திட்டம்

தனி ஆசிரியருக்குப் புதுச் சம்பளத் திட்டத்தினுல் பிரச்னைகள் ஏற்பட்டால், தென் இந்திய ஆசிரியர் சங்கத்திற்கு எழுதவும்.

# ஆங்கில போதனை

V. R. SUBRAMANIAN,
(Headmaster, A. C. C. Factory Ele. School, Madukkarai)

### அவசியம்

ஆங்கிலேயர் நம்மை அடிமைப்படுத்தியதால் அவர்கள் மொழியின் மீது வெறுப்படைவது சரியல்ல என்பதை இன்று உணர்ந்தோம். பல அறிவுத் துறைகளில் வழிகாட்டியாகவும், பாங்குடன் நாடு முன்னேறவும், உலக சமுதாயத்துடன் ஒன்றுகூடி வாழவும் ஆங்கிலம் அவசியம் என்று கண்டுகொண்டோம். வருங்கால வாழ்வில் விழிப்புற்ற நாம் நான்காம் வகுப்பிலிருந்தே அம்மொழியைக் கற்பிக்கப் போவதை எண்ணி மகிழ்ச்சி யடைகிறோம்.

### முறைகள்

அவ்வப்போது ஏற்பட்ட ஆராய்ச்சிகளின் அடிப்படையில் முறைகள் பற்பல கையாளப்பட்டு வந்தன.

1. The Traditional Method: முதலில் எழுத்துக்களைப் படிக்கவும், எழுதவும், எழுத்துக்களைக் கூட்டி வார்த்தைகளை உச்சரிக்கவும், பொருளையும் சேர்த்து மனப்பாடம் செய்வதுமாகும். இதையே Translation Method என்றும் சொல்வதுண்டு ஆங்கில வாக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்த்து மனனம் செய்து ஒப்பித்தலாகும்.

2. Direct Method (Dr. Michael West's): தாய் மொழியில் முதலில் சிந்தித்து பிறகுஆங்கிலத்தில் பேசுவது என்ற முறையை மாற்றி நேரிடையாக ஆங்கிலத்தில் பேசுவதை வளர்க்கும் முறை. அதிலும் Modified Method என்றும் ஏற்பட்டது. அதாவது தேவையான போது தாய் மொழியில் விளக்கம் தருவதாகும்.

3. Basic English: அடிப்படையாக இவ்வளவு வார்த்தைகள் ஒவ்வொரு வருடப் பயிற்சியிலும் கற்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டது.

4. Structural Method: வார்த்தைகள் எண்ணிக்கை மட்டில் போதாது என்றும் வாக்கிய அமைப்பில் அவைகளில் முக்கியத்தையும் எவ்விதம் அமைகிறது என்றும் அறிவதாகும். இது 1952 பாடதிட்டப்படியாகும்.

5. Structural Pattern: 1959 பாட திட்டப்படி கேள்வி பதில் அல்லது உத்திரவு—செயல் அமைப்பு முறையில் ஒவ்வொரு வருடமும் ஐம்பது அமைப்புகள் கற்பித்தல் முறை முதல் இரண்டு மாதங்களில் மனப் பயிற்சி செய்து, நிலைபெறச் செய்தபின், புத்தகப் படிப்பு தொடங்குவதாகும். 1952 முறைப்படி பிள்ளைகள் பதில் மாத்திரம் தந்தால் போதும். ஆனால் தற்போது கேள்வியும் பதிலும் சேர்ந்து அறிவதாகும்.

பாடத்துவக்கத்தில் அன்று நடத்தப் போவதை தாய் மொழியில் விளக்கலாம். ஆனால் பாடம் துவங்கிய பின் தாய் மொழியில் பேசக்கூடாது. செயல் மூலமே விளக்கவேண்டும். தேவையான பொருள்களை சேகரித்துக் கொண்டுவர வேண்டும். பதங்களின் உச்சரிப்பு ஒலி சாஸ்திரப்படி (Phonetics) பயிற்சி அளிக்க வேண்டும். அதன் விதிகளை ஆசிரியர் அறிந்து, பழகி திருந்த வேண்டும். ஆசிரியர் மறு பயிற்சி (Primary or Secondary Training Course in the English Teaching Campaign) பெறும் போது அவைகளைக் கற்க நேரும்.

முதலில் வாக்கியப் பயிற்சி முடிந்ததும், மின் அட்டைகள் (Flash Cards) மூலம் அப் பதங்களையும், வாக்கியங்களையும் பலமுறை உற்று நோக்கி அடையாளம் கண்டுபிடித்துக் கொள்ளவேண்டும். பிறகுதான் எழுத்தறிவு பெறவேண்டும். உதாரணமாக, மின் அட்டையில் Pen என்பதைக் கவனித்து, உச்சரித்து, பின் பக்கமுள்ள படத்தைப் பார்த்து, பொருள் சரி என்று அறிந்து, ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். பின் பதங்களிலுள்ள எழுத்தை தனித்தனியாகச் சொல்லி உச்சரிப்பு (Spelling) மனனம் செய்ய வேண்டும். பிறகே ABCD வரிசை எழுதப் பழகவேண்டும். பேசுதல், படித்தல், எழுதுதல் என்ற வரிசையில் வாக்கியம், பதம், எழுத்து என்று கற்பிப்பதே முறை. இது Traditional Methodக்கு

முற்றிலும் எதிரானது என்பதை கவனிக்கவேண்டும்.

### தவிர்க்க வேண்டியவை

பிள்ளைகளுக்கு முறைப்படி ஒலி உச்சரிப்பு வராவிட்டால் விடாப்பிடியாக முயற்சி செய்து சங்கடங்களில் சிக்க வேண்டாம். அதற்காக விவாதங்கள் செய்து கால விரயம் செய்ய வேண்டாம். நாளடைவில் பழக்கத்தாலும், சுய முயற்சியாலும், பிறரைப் பார்த்தும் திருந்தும் என்று பொறுமையைக் கடை பிடிக்க வேண்டும். அன்னிய மொழியைக் கற்கும் போது அத்தகைய சங்கடங்கள் ஏற்படுவது இயற்கையே. பிள்ளைகள் புத்தகங்களில் ஆங்கில உச்சரிப்பைத் தமிழில் எழுதிப் படிக்கும் பழக்கம் செய்ய விடாமல் அவர்கள் புத்தகங்களை வாங்கி கவனிக்கவேண்டும்.

### சிந்தனைக்குரியவை

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் ஆங்கிலத்தின் தரம் உயர்த்தப்பட வேண்டும். ஒலி உச்சரிப்பு சாஸ்திரம் கற்பிக்கப்பட வேண்டும். பள்ளி ஆய்வாளர் அனைவருக்கும் உடனடியாக பயிற்சி தரவேண்டும் அப்போதுதான் ஆசிரியர் போதனையைத் தணிக்கை செய்ய முடியும். ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர் அனைவரிடத்தும் முறைகளைப் பற்றி விளக்கம் செய்யப்பட்ட ஒரு குறிப்புப் புத்தகம் (Guide Book) அவசியம் இருக்கவேண்டும். ஆரம்ப ஆசிரியர்களின் மாதாந்தரக் கூட்டங்களை இதற்கென வெகுவாகப் பயன் படுத்த வேண்டும். ஆங்காங்கு நடத்தப்படும் Secondary Courseகளில் இன்னும் அதிக ஆசிரியர்களைச் சேர்க்க வேண்டும். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கற்ற முறையைப் பயன் படுத்துகிறார்களா என்பதை கவனிக்க ஒரு திட்டம் தேவை.

### பாட புத்தகம்

இவ்வாண்டு ஐந்தாம் வகுப்பிற்கு வெளிவந்துள்ள அரசியலார் ஆங்கிலப் புத்தகத்தை மறு பரிசீலனை செய்து, மேலும் வெளிவரும் திருத்தியப் பதிப்பில், சில மாறுதல்கள் செய்ய வேண்டுவதை ஆராய்வோம். ஒவ்வொரு பாடத் - தலைப்பிலும் அமைப்புகள் (Structures) என்ன என்பதை அச்சிட வேண்டும். அவ்விதம் செய்தால் அந்த அமைப்பில் அதிகப் பயிற்சிதர முடியும். பாடத்திற்குத் தக்கபடி பயிற்சிகள் அமைய வேண்டும். Lesson II. இது ஒரு உரையாடல் பாடம். இதில் Sundar. There are five என்றபின் How many are you at your house? என்ற கேள்வி கேட்கப்பட வேண்டும். கேள்வி இல்லாமலே Chander பதில் தானாகக் கூறுவது சம்பாஷணை பாடத்திற்குப் பொருந்தாது. கற்பவர்கள் சிறுவர்கள் என்பதை மறக்கக்கூடாது. Page 76. Change into plural: This boy is tall என்பதைவிட This is a boy என்று இருந்தால் நலம். Tall என்பதற்குப் பன்மை இல்லை என்பது சொல்லாமலே எப்படி விளங்கும் ஒரு சமயம் அப்போது சொன்னாலும் மனதில் பதியாது. பதியும் படி சொல்ல வேறு ஒரு தனிப் பாடம் தேவை. பயிற்சியும் தேவை. பாடத்தில் சொல்லிக் கொடுத்ததுதானே பயிற்சியில் கேட்பது முறை. Exercise is a form of Recapitulation அல்லவா?

மேலும், ஓராண்டு ஆரம்பப் பயிற்சியில் அப்புத்தகத்தை முடிக்க முடியுமா? அத்தகைய நிலையில் ஆரம்பப் பள்ளிகள் உள்ளனவா? என்பவை கவனிக்கவேண்டிய விஷயங்கள். ஒரு வாரத்தில் ஆறு காலவரைகள் (periods) போதாது என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

மேற்கண்டவைகளை S. I. T. U. வின் Council of Educational Research ஆராய்ந்து ஆவன செய்ய வேண்டுமென கோருகிறேன்.

பாட புத்தகத்திற்கேற்றபடி பார்த்தெழுதும் வரிசையில் பயிற்சிப் புத்தகங்கள் (Copy books) அரசியலார் வெளியிடுவதும் வரவேற்கத் தக்கதாகும் என்று கருதுகிறேன்.

### வேண்டுகோள்

ஒரு அன்னிய பாஷையை அவசியத்தின் பொருட்டு கற்பதால் நம்முடைய சம்பிரதாயங்களையோ, மரியாதை முறைகளையோ, பழக்க வழக்கங்களையோ மாற்றக் கூடாது. ஆதலால் பிரிட்டிஷ் கவுன்ஸில் அதிகாரிகள் 'இந்திய பள்ளிக்கூடங்களுக்கு ஆங்கிலம்' என்பதைக் கருதி நம் சூழ்நிலைக்குத் தக்கபடி யோசனைகள் கூறி உதவுவதுடன், பாடங்களையும், வாக்கியங்களையும் புத்தகங்களில் எழுத வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

# தென் இந்திய ஆசிரியர் சங்க விசேஷ மகாநாடு—தஞ்சை

தென்னிந்திய ஆசிரியர்கள் கழகச் சிறப்புக் கூட்டம் 30-12-1960 கரந்தைத் தமிழ்ப் பெரு மன்றத்தில் சங்கத் தலைவர் ஸ்ரீ ஜி. கிருஷ்ணமூர்த்தி (எம்.எல்.சி.) தலைமையில் நிகழ்ந்தது. ஸ்ரீ சொக்க லிங்கம் இறை வணக்கம் செய்ததோடு கூட்டம் தொடங்கிற்று. மேற்கூறிய கழ கச் சார்பில் கூட்டுச் செயலாளர் ஸ்ரீ கே. எஸ். கிருஷ்ணனும், தஞ்சை மாவட்ட ஆசிரியர் கழகச் சார்பில் செயலாளர் ஸ்ரீ எஸ். கணபதியும் வரவேற்புரை நிகழ்த்தினர்.

## திறப்பாளர் உரை

தஞ்சை வழக்குரைஞரும் கரந்தைத் தமிழ்க் கல்லூரி கௌரவத் தலைவருமான ஸ்ரீ எஸ். சுயம்பிரகாசம் திறப்புரை நிகழ்த்தினர்.

அவர் கூறியதாவது :—

ஆசிரியர்களுக்கு நல்வாழ்வு ஏற்பட்டால்தான் அவர்கள் மாணவர்களது நலனைக் கவனிப்பார்கள். ஆசிரியர்கள் தொழிலாளர் அல்ல. ஆசிரியர்களது அன்றன்றுட நிலைமையையும் அவர் களது குறைகளையும் அறிந்து அவற்றை நீக்க ஒரு கமிஷனை அரசியலார் நிய மிக்க வேண்டும். சமீபத்தில் ஆசிரியர் களின் சம்பள விகிதம் திருத்தி யமைக்கப்பட்டிருக்கிறது. இச்சம்பளத் திருத்தி யமைப்பால் சிலருக்குத்தான் நன்மை. உணவுப் பொருள்களின் விலை ஏறிக்கொண்டே போகிறது. அவ சியமான உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்துக்குத். தக்கவாறு அப்போதைக் கப்போது சம்பள உயர்வு ஏற்படவேண் டும். கழகப் பள்ளி ஆசிரியர்களுக்கு அவதி அதிகம். அவர்கள் ஒரு ஊரி லிருந்து மற்றொரு ஊருக்கு மாற்றப் படுகையில், அதுவும் கிராமமாயிருந் தால், குடியிருக்க வசதியின்றி வெகு வாய்த் தவிக்கின்றனர். மாற்றலான தும் சிலர் லீவு எடுத்துவிடுகின்றனர். ஆசிரியர்கள் லீவு எடுத்தால், பிள்ளை களின் கதி என்ன ?

ஜில்லா கழகம் ஆசிரியர்கள் வசதி யைக் குறித்து வீடுகள் கட்டிவைத்து ஓரளவு வாடகை வசூலிப்பது சிறந்தது. சில விடங்களில் ஆசிரியைகளுக்கு மட் டும் வீடு கட்டுவதாகத் தெரிகிறது. வீட்டு வாடகை உயர்ந்து கொண்டேபோகிறது. ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் சம்பளத் தைக் கொண்டு வசதியான வீடு தேடிப் பிடிப்பது வெகு கஷ்டம். ஆசிரியர்கள் அரசியலில் பிரவேசிக்கக்கூடாது. தங் கள் தேவையைப் பெற சீரிய, ஒழுங் கான, கௌரவ வழியில் அரசாங்கத் துக்கு விண்ணப்பித்துக்கொள்ள வேண் டும்.

தற்காலத்தில் கல்வியின் திறன் குறைந்துவிட்டது. கல்வியைப் பற்றிய கவலையும் குறைந்துவிட்டது. வகுப்பில் மாணவர் எண்ணிக்கை ஏற ஏற, மாண வர் திறன் குறைய நேரிடுகிறது. ஆசிரி யர்கள் அரசாங்கம் சொல்வதற்கெல்லாம் தலையை ஆட்டித்தான் ஆக வேண்டும். அது நல்லதா, கெட்டதா என்பதைப் பற்றி ஆசிரியர்கள் சொல்லக்கூடாது. ஆங்கிலம் 2-வது பாரத்தில் தொடங்கு கிறதென மாற்றியதன் தீப்பயனையறிந்து மறுபடியும் இப்பொழுது 5-வது வகுப்பி லிருந்து ஆங்கிலம் போதிக்க கட்டளை பிறந்திருக்கிறது. கட்சிகள் வரும், கட்சியினர் மாறுவார்கள். ஆனல், ஆசிரியர் தங்கள் கடமைகளைச் செய்தே ஆக வேண்டும். மாணவர்களைச் சிறந்த நாட்டினராக்கும் கடமை ஆசிரியர் களைப் பொருத்ததாகையால், அவர்கள் மாணவர்களைச் சிறந்த வழியில் பழக்க வேண்டும்.

## தலைவர் உரை

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி தம்து தலைமை உரையில் கூறியதாவது :—

ஆசிரியர்களது வாழ்க்கைக்கு வேண் டிய ஊதியம் அவர்களுக்கு அவசியம்.

அரசாங்கம் ஆசிரியர்களுக்கும் சில நிவாரணங்கள் அளித்திருக்கிறது. அரசாங்க ஊழியர்களைப் போலவே ஆசிரியர்களும் நடத்தப்பட வேண்டும். வீட்டு வாடகைப் பிரச்னையை அரசாங்கம் கவனிக்கவில்லை. வீட்டு வாடகை அவசரப் பிரச்னே. மதிய உணவுக்காக ஆசிரியர்கள் யாசிப்பது அழகல்ல. இத் திட்டத்தை அரசாங்கமே பூராவாக மேற்கொண்டு நடத்த வேண்டும். சர்க்கார் சேவையில் ரூ. 100-க்குக் குறைந்த சம்பளக்காரர் இருக்கக்கூடாதென்கையில் லோயர் கிரேடு, ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு முறையே ரூ. 65-ம், ரூ. 70-ம் கொடுப்பது நியாயமாகுமா ? 14 ஆண்டுகளாக வீட்டு வாடகைப் பிரச்னே ஒத்திப் போடப்பட்டு வருகிறது. ஒரு ஏஜென்ஸி கீழ் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் மற்றொருவகை ஏஜன்ஸியின் கீழ் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும் சம்பளம் முதலியவற்றில் வித்தியாசமேன்? ஒரு ஆசிரியருக்கு மாதம் ரூ. 3, 4 உதவிச் சம்பளம் (பென்ஷன்) சாங்ஷன் ஆகியிருப்பது பரிதபிக்கத்தக்கது. சர்க்கார் பியூனுக்கு பென்ஷனோடு ரூ. 10-க்கு உத்தரவு பிறந்திருக்கிறது. அத்தகைய ஏற்பாடு ஏன் ஆசிரியர்களுக்குக் கிடையாது? சர்க்கார் பியூனே விட ஆசிரியர்கள் மோசமாக நடத்தப்படுகிறார்கள். எல். டி. ஆசிரியர்களுக்கும் சர்க்கார் அலுவலர்களுக்கும் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குப் போகையில் சம்பள அதிகரிப்பு உயர்கையில் செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப் பொருத்தவரையில் அது இறங்குமுகமாயிருக்கிறது. பாடத் திட்டமும் தற்பொழுது சரியல்ல. 55 வயது ஆகிவிட்டால் ஆசிரியர்கள் மானேஜ்மெண்டாரின் தயவில் இருக்க நேரிடுகிறது. ஆசிரியர் சமூகத்தில் ஒற்றுமையும் கட்டுப்பாடும் வளர வேண்டும். மாணவர்களுக்கும் மாணவியர்களுக்கும் பாட திட்டங்களில் வித்தியாசங்கள் இருக்க வேண்டியது அவசியம்.

பின்னர் திருச்சி ஸ்ரீ கந்தசாமியும், தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணித் தலைவர் ஸ்ரீ ராமையாத் தேவரும் பேசினார்கள். ஸ்ரீ கே. எஸ். கிருஷ்ணன் நன்றி கூறினார்.

மாலை நிகழ்ச்சிகள்போது சென்னை ஸ்ரீ எம். டி. சீனிவாசாச்சாரியார் பேசுகையில், ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சகல சலுகைகளும் குமாஸ்தா, லைப்ரேரியன், பியூன் முதலிய எல்லோருக்கும் அளிக்கப்பட வேண்டும் என மொழிந்தார்.

மதுரை ஸ்ரீ எஸ். குப்புசாமி, திருநெல்வேலி ஸ்ரீ பி. எஸ். சீதாராமன், ஸ்ரீ ராமசாமி முதலியார், திருச்சி ஸ்ரீ எஸ். சீனிவாசன், நாகை ஸ்ரீ ஆர். கிருஷ்ணசாமி ஐயங்கார், தஞ்சை ஸ்ரீ ஜே. ஜி. கோயிற்பிள்ளை மற்றும் பலரும் தங்கள் தங்களுக்குத் தெரிந்துள்ள குறைகளை எடுத்துரைத்தனர்.

## தீர்மானங்கள்

பின்னர் அரசாங்க மான்யம் பெறும் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கும் கழகப்பள்ளி ஆசிரியர்களில் இதுவரை கிடைக்காதவர்களுக்கும் வீட்டு வாடகை அலவன்ஸ் அளிக்குமாறும், அரசாங்கப் பள்ளி, கழகப்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு வழங்கும் மருத்துவ சலுகையை மான்யம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்குமாறு கோரியும், அரசாங்கப் பள்ளியிலிருந்து ரிடையரான ஆசிரியர்களுக்குக் கொடுப்பது போல் இதர பள்ளி ஆசிரிய பென்ஷனர்களுக்கும் கிராக்கிப்படி வழங்கும்படியும், எல்லா ஆசிரியர்களுக்கும் ஒரே மாதிரியான $\frac{1}{4}$ பென்ஷன் வழங்கும்படி கோரியும், பள்ளி குமாஸ்தாக்கள், லைப்ரேரியன், அட்டண்டர்ஸ், பியூன் ஆகியவர்களுக்கும் ஒய்வுகால உபகாரச் சம்பளம் அளிக்குமாறு அரசாங்கத்தை வேண்டியும் தீர்மானங்கள் நிறைவேறின.

## RESOLUTIONS PASSED AT THE S.I.T.U. EXTRAORDINARY CONFERENCE AT TANJORE ON 30-12-1960

1. This conference expresses its great disappointment at the denial for the last FOURTEEN YEARS of House Rent Allowance to a large section of Teachers (Teachers in all Aided Institutions and some District Board Institutions) in spite of repeated representations, and urges on the Government the need to provide for

the same at least in the ensuing Budget.

2. This conference urges on the Government the need to extend the benefit of medical concessions to Teachers in Aided Institutions on a par with Teachers in Government and Local Board Institutions.

3. This conference requests the Government to grant

(a) a Temporary Increase in pension of Rupees Ten to Teacher-pensioners on a par with Teachers retired from Government Institutions ;

(b) uniform scale of ¼ pension for all grades of Teachers ;

(c) pension for the Non-teaching staff inclusive of inferior servants in Aided and Local Board Secondary Schools.

4. This conference resolves to authorize the President and Secretary to submit a memorandum to the Government on the fixation of revised Scales—the memorandum to be based on the suggestions made at this conference.

---

## தென் இந்திய ஆசிரியர் சங்கத் தலைவரின் கடிதம்

ஆரம்ப ஆசிரியர்களாகிய சுமார் ஒரு லக்ஷம் எண்ணிக்கை உள்ளவர்கள் ஒற்றுமைப்பட வேண்டிய அவசியத்தை நாம் உணர்வோம். இன்றைய தினம் நமக்குக் கிடைக்க வேண்டிய ஊதியத்தையோ, மற்ற நியாயமான சலுகைகளையோ நாம் பெறவில்லையென்றால், அதற்குக் காரணம் போதிய அளவு ஒற்றுமையை நாம் பெறாததே.

நம் குறைகளை ஒருமுகமாக அடிக்கடி எடுத்துச் சொல்லி வற்புறுத்தாததே நம் குறை. ஜனநாயக சர்க்காரில் எடுத்துச் சொல்ல சங்கங்களும், பத்திரிகைகளும் அத்தியாவசியமானவை. பத்திரிகைகள் நமக்குள் ஒற்றுமையை வளர்ப்பதுடன் நம் குறைகளை எடுத்துச் சொல்லி உருவான நிவாரணம் தேட முடியும்.

அந்த நோக்கங்களுடன் தென் இந்திய ஆசிரியர் சங்க மாதாந்திரப் பத்திரிகையான "**பாலர் கல்வி**" வேலை செய்யத் தொடங்கியிருக்கிறது. இதை ஆதரிக்க வேண்டியது நம் கடமை. நம்மை நாமேதான் உயர்த்திக்கொள்ள முடியும். சந்தாதாரராகச் சேர்ந்து நம்முடைய நிலையை உயர்த்திக்கொள்ள நாமே பாடுபடுவோமாக.

குறைகளைத் தெரிவித்தால், உடனே நிவாரணம் தேடப்படும். பத்திரிகையில் விவரம் தெரிவிக்கப்படும்.

வருட சந்தா ரூபாய் இரண்டேதான்.

**ஜி. கிருஷ்ணமூர்த்தி, எம்.எல்.சி., தலைவர்**

# மாணவர்களே அமைத்த பல்கலைக் கழகம்

## பேர்லின் நகரத்து சுயேச்சைப் பல்கலைக் கழகம்

ஒவ்வொரு பல்கலைக் கழகத்துக்கும் அதற்கெனச் சிறப்பான வரலாறு இருக்கிறது; மற்ற பல்கலைக் கழகங்களிலிருந்து பிரித்துச் சொல்லக்கூடிய தனிச் சிறப்பான அம்சங்கள் ஒவ்வொரு பல்கலைக் கழகத்துக்கும் உண்டு. அவ்வப் போதைய அரசியல் விளைவுகள் அதன் விதியை நிர்ணயிக்கின்றன. ஆனல் பெர்லின் நகரத்து சுயேச்சைப் பல்கலைக் கழகம் இந்த விதிக்கு விலக்கானது; கிழக்கு மேற்குத் தகராறின் விளைவாகத் தான் இந்தப் பல்கலைக் கழகம் உருவாகி நிற்கிறது என்பது இதன் சிறப்பம்சம். 1945-ஆம் ஆண்டுக்குப் பிறகு சில ஜெர்மனியர் காம்யுனிஸ முறையைப் பரப்ப எண்ணி, கல்லூரி இளைஞர்களின் மனத்தில் தமது கொள்கையைப் புகுத்துவதில் முனைந்தார்கள். சுவிரக்க மற்ற விதத்தில், திமிருடன் அவர்கள் இதில் ஈடுபடவே, அவர்கள் யாருடைய மனத்தை மாற்ற விரும்பினார்களோ, அந்த இளைஞர்களே அவர்களைப் புறக்கணிக்க ஆரம்பித்து, இறுதியில் அவர்களுக் கெதிராகக் கிளர்ந்தும் எழுந்தார்கள்.

கிழக்கு பெர்லினில் அமைந்துள்ள ஹம்போல்ட் பல்கலைக் கழகத்தில் போருக்குப் பின்னர் ஸோவியத் மேற்பார்வை ஆரம்பமான மூன்றே ஆண்டுகளுக்குள் மாணவர்களின் மனத்தில் சத்தியம், நீதி, சுதந்திரம் ஆகியவற்றுக் கெனத் தீவிர வேட்கை உண்டாகி விட்டது. இதன் விளைவாக, சுயேச்சை பல்கலைக் கழகம் ஒன்றிற்கான கோரிக்கை திடீரென்று ஒரு நாள் வன்மையாக எழுந்தது; காம்யுனிஸ்ட் கட்சி வெறியர்களின் தலையீடு இல்லாமல் ஒரு பல்கலைக் கழகம் மேற்கு பெர்லினில் உருவாக வேண்டும் என்று கோஷம் கிளம்பியது. 1948-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23-ஆம் தேதி யன்று மாணவர்கள் ஒரு கண்டனக் கூட்டமே நடத்தினார்கள்

1948-ஆம் ஆண்டிலேயே டிசம்பர் மாதம் நாலாம் தேதி யன்று, மேற்கு பெர்லினின் டாஹ்லெம் புற நகர்ப் பகுதியில் மாணவர்களாலேயே ஒரு பல்கலைக் கழகம் ஸ்தாபிதமாயிற்று. மாணவர்களே அதன் லட்சியத்தை அறிவித்தார்கள்: "சத்தியத்துக்காகவே சத்தியத்துக்குச் சேவை செய்யும் சுயேச்சைப் பல்கலைக் கழகம் ஒன்று இப்போது ஸ்தாபிதமாகிவிட்டது......இதில் கல்வி பயிலும் மாணவர் ஒவ்வொருவரும் உண்மையான ஜனநாயக மரபுக் கேற்ற வகையில் உயர் பண்புகளை விருத்தி செய்து கொள்ள முடியும். ஒரு தரப்பான பிரசாரத்துக்கு இந்த மாணவர் எவரும் இலக்காக மாட்டார்."

இன்று மேற்கு பெர்லினின் இந்த சுயேச்சைப் பல்கலைக் கழகத்தில் 11,500 மாணவர்கள் இருக்கிறார்கள். முதலில் 2,100-ஆக இருந்த மாணவர் தொகை இப்போது இவ்வளவு தூரம் பெருகியிருக்கிறது. இதில் முழு நேரப்பொறுப்பு வகிக்கும் பேராசிரியர்களின் தொகை முதலில் 31-ஆக இருந்தது, இப்போது 138 ஆகிவிட்டது. மொத்தமுள்ள 11,500 மாணவர்களில் 6,000 பேர் மேற்கு பெர்லினைச் சேர்ந்தவர்கள். கிட்டத்தட்ட 5,000 மாணவர்கள் கிழக்கு ஜெர்மனியிலிருந்து வந்தவர்கள். இந்த ஐயாயிரம் மாணவர்களும், பேராசிரியர்கள் பலரும் கம்யூனிஸ்ட் ஆதிக்கப் பிராந்தியமான கிழக்கு ஜெர்மனியிலிருந்து மேற்கு ஜெர்மனிக்குத் தப்பியோடி வந்தவர்கள். கம்யூனிஸக் கொள்கையையே மேற்கொள்ளும்படி தாம் இடைவிடாது கட்டாயப்படுத்தப்படுவதைப் பொறுக்க முடியாமல் மேற்கு நோக்கி ஓடிவந்தவர்கள் இவர்கள்.

இந்த சுயேச்சைப் பல்கலைக்கழகம் அரசாங்கம் அமைத்ததல்ல. பொதுக் கார்ப்பரேஷன் ஒன்றைப் போல், அதற்குரிய சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு இயங்கும் ஒரு பல்கலைக் கழகம் இது. பேராசிரியர்களும், மாணவர்களும் சுயேச்சையான ஒரு மக்கட் பிரிவாக இங்கே இருந்து வருகிறார்கள். அரசியல்

கட்சி ஒன்றின் கொள்கை வெறியினாலோ, அரசாங்கத்தின் கொள்கை நிர்ப்பந்தத்தாலோ பாதிக்கப்படாதவர்கள் இவர்கள். ஆசிரியர்கள் சுயேச்சையாய் போதிக்கிறார்கள்; மாணவர்கள் சுயேச்சையாய்க் கற்கிறார்கள். சுயேச்சையாய் ஆராய்ச்சி செய்கிறார்கள்.

தம் விவகாரங்களைத் தாமே நிர்வகிக்கும் உரிமை இந்தப் பேராசிரியர்களுக்கு இருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் பல்கலைக்கழகத்தின் முதல்வரை இவர்களே தம்மிடையேயிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள்.

பல்கலைக் கழகத்தின் கல்விச் சபைகள் அனைத்திலும் மாணவர் பிரதிநிதி ஒருவரும் இடம் பெறுகிறார்; அவருக்கு வோட் அளிக்கும் உரிமையும் உண்டு. உயர் ஸெனேட் மன்றத்திலும், பல்வேறு கல்வித் துறைகளுக்கான நிர்வாக மன்றங்களிலும் மாணவர்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக முதல்வரோடும், துறைத் தலைவர்களோடும், பேராசிரியர்களோடும் சரிசமமாக அமருகிறார்கள். இவ்வாறாக, மாணவர்களுக்கும் அவர்களுடைய விவகாரங்களை அவர்களே நிர்வகித்துக்கொள்வதற்கு உரிமை இருக்கிறது; அது மட்டுமல்ல, பல்கலைக் கழகம் முழுவதன் நிர்வாகத்திலும் கலந்து கொள்வதற்குக்கூட மாணவர்களுக்கு உரிமை இருக்கிறது. மாணவர்களுக்குரிய கட்டு திட்டங்களை மாணவர்களே வகிக்கிறார்கள்; அந்தக் கட்டு திட்டங்கள் பல்கலைக்கழகம் முழுவதற்கும் பொதுவான சட்டத்தில் இடம் பெறுகின்றன. இன்னொன்று: முதல்வர் ஒருவர் தமது பதவிக் காலம் முடிந்தவுடன், அந்தப் பதவிக்குரிய சங்கிலியைத் தமக்கு அடுத்தபடியாக வருகிறவரிடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால் அவர் அந்தச் சங்கிலியை நேரடியாக ஒப்படைப்பதில்லை. மாணவர் ஒருவரிடம் அதைக் கொடுக்கிறார்; அந்த மாணவர் தான் புதிய முதல்வருக்கு அந்தச் சங்கிலியை அணிவிக்கிறார். ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குமிடையே எவ்வளவு வன்மையான கூட்டுறவு இருக்கிறது என்பதற்கு இதுவே சான்று.

மாணவர்களுக்கு இந்தப் பல்கலைக் கழகத்தில் உள்ள கூட்டுப் பொறுப் புணர்ச்சியும், கூட்டு உறுதியும் மிகவும் உயர்த்தியானவை. மாணவர்களே உருவாக்கிய பல்கலைக் கழகம் என்பதால் தான் இங்கே இவ்வளவு உயர்த்தியான பண்புகளைக் காண முடிகிறது. சுயேச்சைப் பல்கலைக்கழகம் என்பதால்தான் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்குமிடையே இவ்வளவு உறுதியான பிணைப்பு இருக்கிறது. "சத்தியம், நீதி, சுதந்திரம்" என்னும் கொடியின் கீழ் ஆசிரியர்களும், மாணவர்களும் ஒரே சமுதாயமாக இயங்குகிறார்கள்.

—'இன்ட்ரா'

---

## யூனியன் தலைவரின் சுற்றுப்பிரயாணம்

யூனியன் தலைவர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி, எம்.எல்.சி. 17-12-1960 திருச்சி ஜில்லா வேலாயுதம்பாளையம் ஆரம்ப ஆசிரியர் சங்க ஆண்டு விழாவைத் தலைமை தாங்கி நடத்திக் கொடுத்துவிட்டு, 18-12-1960 சேலம் ஜில்லா சேந்தமங்கலத்தில் நாமக்கல் வட்ட துவக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் 5-வது மாநாட்டில் "ஆசிரியர் நிலை" என்ற பொருள் பற்றி சொற்பொழிவாற்றினார்.

23-12-1960 திருச்சி குரு வித்யாபீடத்தின் ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கி நடத்திக் கொடுத்து, 2-1-1961 தஞ்சை ஜில்லா ஆசிரியர் சங்கத்தின் பொன் விழா பிற்பகல் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.

# குறும்புக்காரன்

(உளநூல் ஆசிரியர் பகுதி)

B. Raghavendra Rao, Thottakurichi

1

குறும்புக் காரப் பையனிடம்
 கரும்புப் போல குண மிருக்குது
திருந்திப் பழகச் சூழ்நிலையைத்
 திருத்திக் கொடுக்க வேண்டுமே.
இரும்பு மனம் படைத்த சிலர்
 செய்யும் விளையாட்டைக் கண்டு
இடித்து அடித்துத் துன்புறுத்தி
 ஏசுவது ஏனய்யா. (கு)

2

சூதுவாது அறிய மாட்டான்
 சொன்னபடி செய்ய மாட்டான்
காது செவிடு படும்படியாய்க்
 கத்திக் கதறி அழுதிடுவான்
தோது முறை கைபிடித்து
 நீதி வழி இழுத்து வந்து
மேதினியில் அவனை ஒரு
 மனிதனாகச் செய்ய வேணும். (கு)

3

உண்ண உடுக்க உடம்பு குளிக்க
 உருண்டு உருண்டு அழுதிடுவான்
பண்ணிக் கொடுத்த பட்சணங்கள்
 எண்ணிக் கொடுத்தால் போதா
 தென்பான்
எண்ண முடியாதத் தொல்லை
 எப்பொழுதும் தந்திடுவான்
கண்ணே! மணியே! என்று சொல்லி
 கனியப் பேசி சாதிக்கணும். (கு)

4

நாயி கழுதை பன்றி மேலே
 நாலு கல்லைப் போட்டு
வாயைப் பிளந்து பல்லைக் காட்டி
 சிரித்து விளை யாடிடுவான்
தீய வழி நல்ல வழி
 தெரிந்தி டாத வயதி னிலே....உ
பாயமாக அவனைத் திருத்தி
 உத்தமனாய்ச் செய்ய வேணும். (கு)

5

பள்ளிக்கூடம் போகச் சொன்னால்
 முள்ளுக் குத்தி நோகு தென்பான்
கள்ள வழியிற் சென்று பொய்யி
 பித்த லாட்டம் பேசி டுவான்
மெள்ள மெள்ள நய பயத்தால்
 நீதிக் கதைகள் பலவும் சொல்லி
கள்ளத் தனத்தி னின்றும் அவனைக்
 கண்யமாகக் காக்க வேணும். (கு)

6

அடக்கம் ஒடுக்கம் தெரிந்திடாமல்
 அன்பு வழியும் புரிந் திடாமல்
எடுத்த எடுப்பில் மடத் தனமாய்
 எதை எதையோ பேசிடுவான்
படித்த பண்பு கொண்ட நாமும்
 பரிதவித்து அவன் செய்கையைப்
பக்குவமாய்த் திருத்தி அமைத்து
 பார் சிறக்கச் செய்ய வேணும். (கு)

7

பிள்ளை குட்டி நாட்டி னிற்கு
 பெருத்த தொரு செல்வ மாகும்
அள்ளி அணைத்து ஆதரித்து
 அன்பு காட்டி வளர்க்க வேணும்
சொல்லும் செயலும் எண்ணங்களும்
 நல்லபடி அமைந்து விட்டால்
கல்லுங் கூட இந்த நாட்டில்
 கவி யெடுத்துப் பாடுமே. (கு)

# திருந்திய மாணவன்

## பழைய நினைவு

B. Raghavendra Rao, Thottakurichi

**பல்லவி**

இப்பத்தான் தெரியுது
எங்கள் வாத்தியாரு குணம்
இதுக்கு முன்னே இருந்த நிலைமை
எண்ணிப் பார்த்தேன் நேத்திக்கு. (இப்)

**சரணங்கள்**

சுப்பு வாத்தியாரு வந்து
கூட்டிப் போனாரு—அங்கு
பக்குவமாய்ப் பாடங்களைச்
சொல்லித் தந்தாரு
தப்பு வழி நடந்த என்னை
திரித்தி வைச்சாரு
இப்ப ஒரு நல்லவனாய்
ஆக்கி விட்டாரு. (இப்)

தலை நிமிர்ந்து பேச நடக்கப்
பழக்கி விட்டாரு—என்றும்
தளர்விலாத நெஞ்சுறுதித்
தந்து விட்டாரு.
நிலை குலைந்து திரிந்த என்னை
நிமிர வைத்தாரு—ஒரு
கலைஞன் என்று மக்கள் புகழ
ஆக்கி விட்டாரு. (இப்)

உலக மனிதனாக வாழச்
செய்து விட்டாரு—பல
உத்தமக் குணங்க ளெல்லாம்
பழக்கி விட்டாரு
நலமிகுந்த நேச நட்பை
வளர்த்து விட்டாரு--என்றும்
நன்றி மறவாத வனாய்ச்
செய்து விட்டாரு. (இப்)

---

## அறிக்கை

நம் ராஜ்யத்தில் ஹையர் கிரேடு ஸ்தானங்களில் வேலை செய்துவரும் செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் அடியிற் கண்ட விவரங்களை யூனியன் காரியாலயத்திற்கு அனுப்புமாறு வேண்டப்படுகிறார்கள் :—

1. ஆசிரியரின் பெயர்
2. பள்ளியின் பெயர் (எய்டெட், முனிசிபல், ஜில்லா போர்டு, பஞ்சாயத்து)
3. தாலுகா, ஜில்லா
4. செகண்டரி கிரேடு பாஸ் செய்த தேதி
5. பள்ளியிலுள்ள Sanctioned Posts-செகண்டரி-ஹையர் கிரேடு

---

## ஓய்வுபெற்ற (Super-annuated) ஆரம்ப ஆசிரியர்கள்

1-4-1955, அல்லது அதற்குப் பிறகு ரிடையரான ஆரம்ப ஆசிரியர்கள் ஏற்கெனவே சர்வீசில் எவ்வளவு Breaks இருந்தாலும், பலவித ஏஜன்ஸிகளின் கீழ் வேலை செய்திருந்தாலும், 1-4-1955 அன்று சர்வீசில் Break ஏற்பட்டிருந்தாலும் பென்ஷன் வாங்கலாம்.

# செய்தித் திரட்டு

## உல்லாசப் பிரயாணம்

22-12-60 அன்று திருச்சி ஈ. ஆர். இந்து துவக்கப் பள்ளி 'ரங்கா' குருளையர் படையைச் சேர்ந்த 24 குருளையர்களும், 36 இதர மாணவர்களும், 16 ஆசிரியர்களும், ஆசிரியர் திரு. T. C. கல்யாணராமய்யர் தலைமையில் பிரத்தியேக பஸ்ஸில் திண்டுக்கல் வழியாக பழனி சென்றனர். மாணவர்களுடன் மலைக்குச் சென்று ஆண்டவனை தரிசித்து, பின் மாலை வைகை அணைக்குச் சென்றனர். அங்கு அணையைச் சுற்றிப் பார்த்தபின் இரவு மதுரையை அடைந்தனர். மறுநாள் திருப்பரங்குன்றம், மதுரையில் மீனாக்ஷி அம்மன் கோவில், திருமலை நாயகர் மஹால், தெப்பக்குளம், மாரியம்மன் கோவில் முதலிய இடங்களைப் பார்த்தனர். பிற்பகல் மதுரையிலிருந்து கிளம்பி அழகர் கோவிலைப் பார்த்துவிட்டு இரவு திருச்சியை அடைந்தனர். குருளையர் தலைவர் திரு. T. R. சீனிவாசன் உல்லாசப் பிரயாணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தார். உதவி குருளையர் தலைவர் திரு. R. கிருஷ்ணமூர்த்தி உடனிருந்து உதவினார்.

## ஆரம்ப ஆசிரியர் சங்கக் கூட்டம்

மாசரா பட்டி வட்டாரம், கோவில் குமா ரெட்டயாபுரம் மையம் ஆரம்ப ஆசிரியர் சங்கக் கூட்டம் 17-12-60 தேதியன்று நடைபெற்றது. திரு. ஜெயராஜ் அவர்கள் தலைமை தாங்கினார்கள். செயலாளர் அ.பரசுராமன் அனைவரையும் வரவேற்றார். அது சமயம் நாகலாபுரம் ச.கோ. கொ. உயர்தர ஆரம்பப் பாடசாலை தமிழ் வித்துவான் திரு. சுப்பையா பிள்ளை அவர்கள் "இலக்கிய இன்பம்" என்னும் தலைப்பிலும் திருமதி விமலா செல்வராஜ் அவர்கள் "5-ம் வகுப்பில் ஆங்கிலப் போதனை" என்னும் தலைப்பிலும் சொற்பெருக்காற்றினார்கள். மாணவ மாணவிகளின் கலா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. செயலாளர் அ. பரசுராமன் நன்றி கூறினார்.

---

## அமெரிக்காவிற்கு இந்தியக் கல்விமான்களின் சுற்றுப் பிரயாணம்

லாஸ் ஏஞ்சல்ஸ் துறைமுகத்திற்குச் சமீபத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த 16 தேசத்துப் பட்டதாரிகளின் குழுவில் இந்தியாவின் சார்பாக 5 கல்விமான்கள் இருந்தனர்.

இந்தியாவைச் சார்ந்த அந்த ஐவர் :—

1. பரோடா பல்கலைக் கழக ஆராய்ச்சித்துறை உயர்நிலைப்பள்ளி முதல்வரான திரு. கௌரி சங்கர் பட்.

2. பெல்காம் ஆசிரியக் கல்லூரியின் கல்வித் துறைத் தலைவரான திரு. விசுவநாத் தேசாய்.

3. கல்கத்தா ஜகத்பந்து ஸ்தாபனத்தின் உதவித் தலைமை ஆசிரியர் பிரிவுல்லா கோஷ்.

5. பஞ்சாப் யுனைடெட் கிறிஸ்தவப் பள்ளி தலைமை ஆசிரியை குமாரி ரூபி ஜோசப்.

4. மைசூர் ஹஸ்ஸானிலுள்ள ஆண்கள் அரசாங்க உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் ஜெ. எம். டி. ராஜன்.

இக்குழுவிற்குத் தலைமை தாங்கியவர் லாஸ் ஏஞ்சல்ஸ் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த டாக்டர் பால்விஷர் ஆவார். 32 பேர்களடங்கிய இக்குழு, பள்ளிகளில் சிறந்த முறையில் போதிக்கும் வழிகளைக் கற்றுக்கொண்டது.

இதுபோன்ற கல்வி சம்பந்தமான மேல் நாட்டுச் சுற்றுப்பிரயாணங்களைக் கல்விமான்களும், ஆசிரியர்களும் மேன்மேலும் எதிர்பார்க்கலாம்.

—குளோப்

எலிமெண்டரி பாடசாலைக்குரிய

# எமது புதிய புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்தை அனுசரித்து எழுதியவை

1—5-ம் வகுப்புகளுக்குரியவை

## பொங்கல் தமிழ் வாசகம்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | (முதல் வகுப்பு) | 37 | ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 40 | ,, |
| மூன்றும் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 50 | ,, |
| நான்காம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | 65 | ,, |
| ஐந்தாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | 85 | ,, |

## கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | (முதல் வகுப்பு) | 40 | ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 40 | ,, |

## லீலாவதி சுலப கணிதம்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 90 | ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | ரூ. 1 00 | |

## நவீன சுலப கணிதம்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | ரூ. 1 25 | |

## நவீன் சமூக வரலாறு

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 45 | ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 75 | ,, |

## புது முறை சமூக வரலாறு

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | ரூ. 1 12 | |
| இரண்டாம் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | ரூ. 1 90 | |

## நமது இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | (இரண்டாம் வகுப்பு) | 40 | ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 40 | ,, |
| மூன்றும் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | 80 | ,, |

## கிண்டர்கார்டன் தமிழ் அப்பியாசங்கள்

| | | | |
|---|---|---|---|
| முதல் புத்தகம் | (மூன்றும் வகுப்பு) | 60 | ந.பை. |
| இரண்டாம் புத்தகம் | (நான்காம் வகுப்பு) | 60 | ,, |
| மூன்றும் புத்தகம் | (ஐந்தாம் வகுப்பு) | 60 | ,, |

## பி. ஜி. பால் அண்டு கம்பெனி

புத்தக வியாபாரிகள்

பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை-1

**Regd. No. M. 3473**
Registered with the Registrar of Newspapers for India under R. N. No. 1230/57.

# பட்டம் விடுவோம்

வி. நடராஜன்

பட்டம் விடலாம், வா வா!
நல்ல காற்று வீசுறது.
இப்போதே விட்டால் பலே ஜோர்!
உயரக் கிளம்பும், மேலே போகும்.
ஒய்யார மாகப் பறக்கும்.
வேகமாக எழும்பும்!
அசைந்து அசைந்து ஆடும்!
ஆடி ஆடி நகரும்!
மேகம் கிட்டப் பேசி நிற்கும்!
வளைந்து வளைந்து வாலை ஆட்டும்!
பாம்புப் பட்டம், கதவுப் பட்டம்,
அநுமார் பட்டம், கருடப் பட்டம்,
அடே! அடே! எவ்வளவு தினுசு!
அழகாகப் பறக்கிறது!
சீனுவின் பட்டம், ராமுவின் பட்டம்,
இரண்டுக்கும் போட்டி பார்!
ஒன்றை யொன்று முட்டுகிறது!
டேய்! சீனு! நூலைச் சுண்டி இழு!
அப்படித்தான்! அதோ பார்!
சீனு பட்டம் கீழே இறங்குது,
ராமு பட்டம் பாய்ந்து கிளம்புது:
சீனு பட்டம் குப்புற விழுந்தது.
கர்ணம் போட்டுக் கனவேகமாக
விழுந்து விட்டது, எங்கேடா?
அதோ பார், தென்னை மரத்தில்
தொங்குது. தேங்கா யோடு
கொஞ்சிப் பேசுது!
ராமு ராமு! எங்கே போறே?
பட்டம் விட்டது போதுமா?
மாலைப் பொழுது முடிந்து விட்டது.
வீட்டு ஜன்னல் கம்பியில்
நூலைக் கட்டி வைக்கிறன் ராமு.
இருட்டிப் போச்சு, ஆனாலும்
நிலா வரும் இரவிலே
நின்று பறக்கும் பட்டம்.
இரவெல்லாம் வானத்தில் இருக்கும்
தூங்கி எழுந்து காலையில்
பார்க்கலாம். போவோம்; வா, வா!

Printed by Sri T. K. Venkatesan at the Jupiter Press Private Ltd., 109-C, Mount Road, Madras-18. Edited by Sri G. Krishnamurthi, M.L.C. and Published by Sri S. D. Krishnamurthi Rao, B.A., L.T., for the S. I. T. U. at Raja Annamalaipuram, Madras-28.